இறைத்தூதன்
கத்தோலிக்க வார இதழ்

கடவுளின் ஆவியால் இயக்கப்படுகிறவர்களே கடவுளின் மக்கள். மீண்டும் அச்சத்திற்கு உள்ளாக்கும் மனப்பான்மையை நீங்கள் பெற்றுக் கொள்ளவில்லை; மாறாகக் கடவுளின் பிள்ளைகளுக்குரிய மனப்பான்மையையே பெற்றுக்கொண்டீர்கள். அதனால் நாம், “அப்பா, தந்தையே” என அழைக்கிறோம். நாம் இவ்வாறு அழைக்கும்போது நம் உள்ளத்தோடு சேர்ந்து தூய ஆவியாரும் நாம் கடவுளின் பிள்ளைகள் என்பதற்குச் சான்று பகர்கிறார். நாம் பிள்ளைகளாயின், உரிமைப் பேறு உடையவர்களாய் இருக்கிறோம். (உரோ 8: 14-16)

# அருள்பணி வாழ்வில் வைர விழாக் கொண்டாடினார் ஓய்வுப் பெற்ற பேராயர்



**கோலாலம்பூர்:** ஓய்வுப்பெற்ற பேராயர் முர்ஃபி நிக்கோலஸ் சேவியர் பாக்கியம் அவர்களின் குருத்துவ வைர விழா கடந்த மே 12, அன்று, கம்போங் பாண்டானில் உள்ள ஆரோக்கிய அன்னை சிற்றாலயத்தில் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

85 வயதான பேராயர் முர்ஃபி பாக்கியம் அவர்கள் அன்றையத் திருப்பலிக்குத் தலைமை தாங்கினார். அவரோடு, பேராயர் ஜூலியன் லியாவ், சிற்றாலயத்தின் பராமரிப்புத் தந்தை Msgr, தனிஸ்லாஸ் சூசைமரியாம் மற்றும் குருத்துவக் கல்லூரி மாணவர் பிலிப் ஆசீர்வாதம் ஆகியோரும்



உடனிருந்தனர். ஏறக்குறைய 200 பங்கு மக்கள் பேராயருக்காக இறைவேண்டல் செய்வதற்கும், கடவுளுக்கு நன்றி கூறவும் சிற்றாலயத்தில் கூடியிருந்தனர்.

கடந்த டிசம்பர் 6, 1938-ல், பேராக், தாப்பாவில் பிறந்த பேராயர் முர்ஃபி பாக்கியம் அவர்கள், மே 10, 1964 இல், தமது 25 வயதில் அருள்பணியாளராக அருள்பொழிவுப் பெற்றார். இதனிமித்தம் மிக இளம் வயதில் அருள்பொழிவுப் பெற்ற மலேசிய அருள்பணியாளர்களில் இவரும் ஒருவர் என்றால் மிகையாகாது.

தொடர்ந்து, பினாங்கு மறைமாவட்டத்தில் அருள்பணியாளராகப் பணியாற்றிய இவர் 1995ல் கோலாலம்பூர் உயர் மறைமாவட்டத்தின் துணை ஆயராக, மறைந்த திருத்தந்தை புனித இரண்டாம் ஜோன் பவுல் அவர்களால் நியமிக்கப் பட்டார். இதனைத் தொடர்ந்து, 2003ஆம் ஆண்டு, கோலாலம்பூர் உயர் மறைமாவட்டத்தின் மூன்றாவது பேராய ராகப் பொறுப்பேற்றார்.

ஏறக்குறைய பத்தாண்டுகால ஆயர் பணிக்குப்பின் 2013ஆம் ஆண்டு பதவி ஓய்வுப்பெற்று, பிப்ரவரி 2016 முதல் கம்போங் பாண்டான் சிற்றாலயத்தில் இன்று வரை தமது முதுமை வயதில் வசித்து வருகிறார்.

விழா திருப்பலியின் போது, பீல் சாலை திருஇருதய ஆண்டவர் பங்கின் பங்குத் தந்தை Msgr. தனிஸ்லாஸ் சூசைமரியாம் அவர்கள் தமிழிலும், பேராயர் ஜூலியன் லியாவ் அவர்கள் ஆங்கிலத்திலும் பேராயர் முர்ஃபி பாக்கியம் குறித்தும் உலக தொலைத்தொடர் தினம் குறித்தும் மறை யுரை ஆற்றினார்கள்.

பேராயர் முர்ஃபி பாக்கியம் அவர்களின் 60-ஆம் ஆண்டு வைரவிழாவைத் தொட்டுப் பேசுகையில், 2016 ஆம் ஆண்டு அவர் சிற்றாலயத்தில் தங்கத் தொடங்கியதிலிருந்து பேராயரோடு உடன் பயணித்துக் கவனித்து வரும் கம்போங் பாண்டான் மற்றும் திருஇருதய ஆண்டவர் பங்கு இறைமக்க ளுக்கு பேராயர் ஜூலியன் நன்றி தெரிவித்தார்.

பேராயர் முர்ஃபி பாக்கியம் தமது அருள்பணி வாழ்வில் எங்கும் உறவுகளை



கட்டியெழுப்பினார் என்றும் பேராயர் ஜூலியன் பெருமிதம் கொண்டார். நிறைவாக, இன்றைய நவீன இயந்திர மயக் காலத்தில் உண்மையில் நாம் தனிமைப் படுத்தப்படுகிறோம் என்றும், உறவுப் பாலங்களை ஏற்படுத்தி உறவுகளோடு வாழ வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார். திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் வலியுறுத்துவதைப் போல் செயற்கை நுண்ணிவு (Artificial Intelligence) தாக்கத்திற்கு இடம் தராமல் மனித நேரடி தொடர்புகளுக்கு முக்கியத்துவம் அளிப்பது சாலச் சிறந்தது என்ற செய்தியையும் முன்வைத்து உரையை நிறைவுச் செய்தார்.

நிறைவாக, Msgr தனிஸ்லாஸ் சூசை மரியாம் அவர்கள் பேராயர் முர்ஃபி பாக்கியம் அவர்கள் குறித்து பேசுகையில், பேராயர் பாக்கியம் அவர்களின் 60வது ஆண்டு குருத்துவ அர்ப்பணிப்புக்கு வாழ்த்துத் தெரிவித்ததோடு, அவரோடு கூடியக் கடந்த கால நினைவலைகளைப் பகரிந்துகொண்டார். அவர் முதலில் பினாங்கு குருத்துவக் கல்லூரியான ‘கோலேஜ் ஜெனரலில்’ ஓய்வுப் பெற்ற பேராயரைச் சந்தித்ததாகக் கூறினார். அப்போது பேராயர் முர்ஃபி பாக்கியம் அவர்கள்தான் கல்லூரி முதல்வராக பணியாற்றியதாகவும் அவரது பார்வையின் கீழ் அருள்தந்தை தனிஸ்தாஸ் கல்லூரியில் பயின்றதாகவும் கூறினார். அப்போது, குருத்துவ மாணவர்களை அவர் எப்போதும் அன்போடும் அக்கறையோடும் கவனித்துக் கொள்வார் என்றும் கருத்துரைத்தார். கல்லூரி காலத்தில் பேராயர் முர்ஃபி தமது சொந்த சித்தாந்தத்தை மாணவர்கள்



மீதுத் திணிக்காமல் திறந்த மனதுடன் பழகுவார் என்றும் பெருமிதம் கொண்டார்.

-தமிழாக்கம்: ஆர்.கே.

# முதல் உலக குழந்தைகள் நாளுக்கான திருத்தந்தையின் செய்தி (சுருக்கம்)

# “இதோ! நான் அனைத்தையும் புதியது ஆக்குகிறேன்”



அன்புள்ள குழந்தைகளே!

திருவிவிலியம் நமக்குக் கற்பிப்பது போலவும், இயேசு அடிக்கடி சுட்டிக்காட்டியது போலவும், கடவுளின் பார்வையில் "குழந்தைகளாகிய நீங்கள் விலையேறப் பெற்றவர்கள்" (எசாயா 43:4). எல்லா குழந்தைகளும், எல்லா இடங்களிலும், ஒவ்வொரு நபரின் வளர்ச்சி மற்றும் செழிப்புக்கான விருப்பத்தின் அடையாளமாகத் திகழ்கின்றார்கள். குழந்தைகளாகிய நீங்கள் **‘நாம் அனைவரும் குழந்தைகள், சகோதர சகோதரிகள்’** என்பதை நினைவூட்டுகிறீர்கள். இந்த உலகத்திற்கு பிறரால் கொண்டு வரப்பட்ட நாம், பிறரை அன்பு செய்வதிலும், பிறரிடம் இருந்து அன்பைப் பெறுவதிலும் வளர்ச்சி அடைய வேண்டும்.

குழந்தைகளே! நீங்கள் அனைவரும் உங்கள் பெற்றோருக்கும், குடும்பங்களுக்கும் மகிழ்ச்சியின் ஆதாரமாக இருக்கின்றீர்கள். அது மட்டுமல்லாமல் நம் ஒவ்வொருவரையும் கடந்த காலத்திலிருந்து எதிர்காலத்திற்கு முழு உலகோடு இணைக்கும் மனிதகுலத்திற்கும், திருஅவைக்கும், மகிழ்வின் ஆதாரமாக இருக்கின்றீர்கள். அதனால்தான் உங்களின் பெற்றோர்கள், தாத்தா பாட்டிகள் மற்றும் வயதில் மூத்தோர் \களின் கதைகளைக் கவனமுடன் கேட்டு வளர உங்களை ஊக்கமூட்டுகின்றேன். மேலும் மருத்துவமனையிலோ அல்லது வீட்டிலோ உடல்நோய் மற்றும் துன்பங்களால் போராடுகின்ற, தங்களது குழந்தைப் பருவம் கொடூரமாகப் பறிக்கப்படுகின்ற சூழலில் வாழும், பிற குழந்தைகள் மற்றும் இளைஞர்களை நாம் மறந்து விடக்கூடாது.

போர் மற்றும் வன்முறையால் பாதிக்கப்பட்ட குழந்தைகள், பசி, தாகத்தை அனுபவிப்பவர்கள், தெருக்களில் வாழ்பவர்கள், படைவீர்களாக மாற கட்டாயப் படுத்தப்பட்டவர்கள், புலம்பெயர்ந்தவர்கள், பெற்றோரைப் பிரிந்தவர்கள், பள்ளிக்குச் செல்ல தடை விதிக்கப்பட்டவர்கள், தீவிரவாத குழுவினர், போதைப் பொருள், இதர அடிமைத்தனங்கள் மற்றும் முறைகேடுகளுக்கு ஆளானவர்கள் என அனைவரையும் நினைவுகூர்கின்றேன். அவர்களின் குரலுக்கு செவிசாய்ப்போம். வாழ்க்கை எதார்த்தத்தை நினைவூட்டுகின்ற, துன்புறும் அவர்களின் குரல்களுக்கு நாம் செவிசாய்க்க வேண்டும். நன்மைக்கான உறுதியான ஏக்கத்துடன், கண்களில் கண்ணீரோடு நிற்கும் அவர்களின் குரலுக்கு நாம் செவிசாய்க்க வேண்டும்.

அன்பார்ந்த இளம் நண்பர்களே, நாமும் நமது உலகமும் வளர, செழிக்க, ஒருவரோடு ஒருவர் இணைந்திருப்பது மட்டுமன்று, எல்லாவற்றிற்கும் மேலாக நாம் இயேசுவோடு ஒன்றிணைந்து இருக்க வேண்டும். அவரிடமிருந்தே நாம் மிகுதியான துணிவைப் பெறுகின்றோம். அவர் எப்போதும் நமக்கு மிக நெருக்கமாக இருக்கிறார், அவருடைய தூய ஆவியின் ஆற்றல் நமக்கு முன்னாலும், உலகின் அனைத்துப் பாதைகளிலும் நம்முடன் செல்கின்றது. இயேசு நம்மிடம் **"இதோ, நான் எல்லாவற்றையும் புதியது ஆக்குகிறேன்"** (திருவெளிப்பாடு 21:5) என்று கூறுகின்றார்.

நாம் அனைவரும் ஒன்றிணைந்து இருக்கும்போது, எல்லாமே வித்தியாசமானதாக இருக்கும். உங்களது நண்பர்களை நினைத்துப் பாருங்கள், வீட்டில், பள்ளியில், பங்கில், விளையாட்டு மைதானத்தில், எல்லா இடங்களிலும் அவர்களுடன் நேரத்தை பகிரும்போது எவ்வளவு சிறப்பாக இருக்கின்றது. விளையாடுதல், பாடுதல், புதியவற்றைக் கண்டறிதல், மகிழ்ச்சியாக இருத்தல், போன்ற எல்லா செயல்களிலும் ஒருவரையும் ஒதுக்காமல் ஒன்றிணைந்து இருத்தல் வேண்டும்.

உலகின் பல்வேறு பகுதிகளிலிருந்து உரோமிற்கு பல குழந்தைகள் இந்த முதல் உலக குழந்தைகள் நாளைக் கொண்டாட வருகின்றனர் என்பதை நீங்கள் அறிவீர்கள். அதற்காக நன்கு தயாரிக்க இயேசு கற்றுக்கொடுத்த இறைவேண்டலை ஒன்றிணைந்து செபிக்க உங்களை அழைக்கின்றேன். ஒவ்வொரு நாளும் காலையிலும் மாலையிலும் விண்ணகத்தந்தையை நோக்கிய செபத்தை உங்களது பெற்றோர், உடன்பிறந்தோர், தாத்தா பாட்டிகளோடு இணைந்து செபியுங்கள். வெறும் வார்த்தைகளாக மட்டுமன்று இயேசு நாம் அவரோடு இணைந்து ஆற்றலுடன் செயல்பட அச்செபத்தின் வழியாக நம்மை




## மூவொரு கடவுள்- படைத்து, மீட்டு, இயக்கும் கடவுள்

இன்று நாம் கொண்டாடும் மூவொரு இறைவனின் விழா நமக்கு ஒரு பெரிய மறை உண்மையாகவும், மனித அறிவால் புரிந்துகொள்ள கடினமானதாகவும் தோன்றலாம். ஆனால் புனிதர்களும், இறையியலாளர்களும் இதைப் பற்றி எடுத்துரைத்துள்ளனர். தொடக்ககாலத்தில் யூத மக்கள் தந்தையாகிய யாவே கடவுளை மட்டுமே அறிந்திருந்தனர். இறைவாக்கினர்களின் வாய்மொழியாக, மெசியாவின் வருகைக்காக எதிர்நோக்கிக் காத்திருந் தனர். ஆனால் அவர்களின் புரிந்துணர்வு தந்தை, மகன், தூய ஆவியார் என்ற அளவில் இல்லாமல் இருந்தது.

இன்றைய முதல் வாசகத்தில் மோசே இஸ்ராயேல் மக்களுக்கு வாழும் கடவுளின் மாட்சியைப் பற்றி எடுத்துரைக்கின்றார். மனித வரலாற்றில் தமக்கென ஒரு இனத்தைத் தேர்ந்துகொண்டு, அந்த இனம் வாழ ஒரு நாட்டையும் காண்பித்த இறைவன், எவ்வாறு வாழவேண்டும் என்று வரையறுத்தும் கொடுத்தார். இதுபோன்ற இறைவனை எங்கேனும் கேட்டதுண்டா என்று மோசே எடுத்துரைக்கின்றார்.

ஆம். விண்ணிலும் மண்ணிலும் உள்ள ஒரே கடவுள் அவரே. இஸ்ராயேல் மக்கள் தங்களைச் சுற்றி வாழ்ந்த மக்கள் அவரவர் தெய்வங்களை வழிபட்டதை அவர்கள் அறிந்திருந்தனர். ஆனாலும், மேலே விண்ணிலும் கீழே மண்ணிலும் ஆண்டவர் ஒருவரே கடவுள் என்பதை நம்பினர்.

இந்தக் கூற்றைத் தான் அழுத்தமாக புனித பவுல் நமக்குக் கூறுகிறார். நாம் தூய ஆவியால் இயக்கப்படுவதால் கடவுளை “அப்பா, தந்தாய்” என்று பிள்ளைகளின் உரிமையோடு தந்தையை அழைக்கின்றோம். கிறிஸ்து தாம் அர்ப்பணித்த தூய விலைமதிப்பில்லாத இரத்தத்தால் அந்த உரிமைப்பேற்றை நமக்குப் பெற்றுத்தந்தார் என்கிறார்.

நம்மைத் திக்கற்றவர்களாக விட்டுவிடாமல். அன்புக்காட்டும் தந்தையையும், இரக்கம் காட்டும் இயேசுவையும், துணிவைத் தரும் தூய ஆவியாரையும் ஒருங்கிணைத்து, நம்முடைய அருளடையாளங்கள் ஒவ்வொன்றிலும் மூவொரு இறைவனின் வல்லமையை வெளிப்படச் செய்தார்.

மூவொரு கடவுள் தங்களிலேயே உறவு நிலையில் இருக்கின்றார்கள் என்றும், அவர்களுக்கென்று ஒவ்வொருவருக்கும் ஒரு பணி இருக்கிறது என்றும் வரையறுக்கிறது நம் கத்தோலிக்கத் திருஅவையின் மறைக்கல்வி (காண். எண்கள் 267, 255).

ஆக, உறவும் பணியும் இங்கே அடிப்படையாக இருக்கின்றன. மூவொரு கடவுள், தங்களுக் கிடையே, தந்தை-மகன்-உறவின் கனி என்னும் நிலைகளில் ஒருவர் மற்றவரோடு உறவில் இருக்கின்றனர். அதுபோல, தந்தை படைக் கின்றார், மகன் மீட்கின்றார், ஆவியார் வழிநடத்துகின்றார்.




எனவே, மூன்று பணிகளை அவர்கள் செய்கின்றனர்.

மூவொரு கடவுள் எப்படி? என்று கேட்பதை விட, மூவொரு கடவுள் ஏன்? என்று கேட்பதே சிறப்பு. மனித வாழ்வின் அடிப்படை அலகுகளான 'உறவு' மற்றும் 'பணி' ஆகியவற்றை வரையறை செய்வதற்கு மூவொரு இறைவன் நமக்கு அளவுகோலாக இருக்கின்றார். மூவொரு கடவிளில் நம்பிக்கை வளர்ப்போம் வாழ்வோம்.

-ஜோசப்பின் போஸ்கோ, சிரம்பான்

**மூவொரு இறைவன் ஞாயிறு -பெருவிழா**

| | |
|---|---|
| முதல் வாசகம் | இ.ச. 4: 32-34, 39-40 |
| திரு.பாடல் | 33: 4-5, 6,9, 18-19, 20,22 |
| 2-ம் வாசகம் | உரோ 8:14-17 |
| நற்செய்தி | மத்தேயு: 28: 16-20 |

**ஞாயிறு வாசகம் ஆண்டு 2 (B)**
**வாரநாள் முதல் வாசகம் -ஆண்டு 2**
**திருப்புகழ் மாலை- பெருவிழாவுக்குரியது**